பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 11 2024 **THURSDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளையோரின் முன்னேற்றத்திற்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்க மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. விரிவுபடுத்தப்படவுள்ள ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராவதற்கு இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. பிரதமரின் மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்திற்கு ஆயிரத்து 156 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு. ஹேமந்த் சோரன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

5. சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

இளையோரின் முன்னேற்றத்திற்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்க மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நம் நாட்டின் இளையோர் சக்தி என்பது பல அற்புதங்களை செய்யக்கூடியது என்று குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களை பல்வேறு துறைகளில் பிரகாசிக்கச் செய்வதற்கும் சிறந்து விளங்குவதற்கும் தேவையான வாய்ப்புகளை வழங்க அரசு தயாராக உள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி அதில் கூறியுள்ளார்.

>>>>><<<<<

இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரத்தை உலக நாடுகள் உறுதியுடன் பின்பற்றி வருவது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது சமீபத்திய வெளிநாட்டுப் பயணத்தின் போது, அங்குள்ள மக்கள் இந்திய கலாச்சாரத்தை பின்பற்றுவதை பிரதமர் சமூகவலைதளத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையிலேயே இந்திய கலாச்சாரம் வேகமாக உலக நாடுகளில் பரவி வருவது, மகிழ்ச்சிக்குரியதாக அமைந்துள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கத்திற்கு அதன் உறுப்பு நாடுகளுடன் இணைந்து இந்தியா முழுஆதரவு அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், தற்போதைய உலகளாவிய சூழலை எதிர்கொள்வதற்கும், விரிவுபடுத்தப்படும் பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராவதற்கும் இந்தியாவுக்கு அனைத்து தகுதிகளும் உள்ளதாக குறிப்பிட்டார்.

அந்த வகையில், நிரந்தர உறுப்பினராவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயலாற்றும் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் சீர்திருத்தங்கள் குறித்து, பல்வேறு நாடுகளுடன் தொடர்ந்து இருதரப்பு மற்றும் பன்முக பேச்சுவார்த்தையில் இந்தியா ஈடுபட்டிருப்பதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

அதிவேக ரயில்கள் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியை ரயில்வே துறை தொடங்கியிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலையும், தனியார் நிறுவனமும் இணைந்து, அதிவேக ரயில்கள் தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக கூறினார்.

மணிக்கு 280 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய ஒரு ரயிலின் உற்பத்திச் செலவு 28 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் வந்தேபாரத் ரயில்களின் சேவை சிறப்பான முறையில் உள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ரயில்களில் முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளை அகற்றும் திட்டம் ஏதும் இல்லை என்று கூறினார்.

**>>>>><<<<<**

பிரதமரின் சூரியசக்தி திட்டத்தின் கீழ், வீடுகளின் மேற்கூரையில் சூரியசக்தி தகடுகளை அமைப்பதில் குஜராத் மாநிலம் முன்னிலையில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. ஸ்ரீபத் நாயக், நாடுமுழுவதும் சூரியசக்தி திட்டங்களை அமைப்பதற்காக 26 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்களில் சூரியசக்தி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

**>>>>><<<<<**

இந்திய மீனவர்கள் 211 பேர் பாகிஸ்தானில் காவலில் இருப்பதாக மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த ஜூலை மாதத்தில் காவலில் உள்ள இருநாடுகளின் மீனவர்கள் குறித்த பட்டியல் பகிர்ந்துகொள்ளப்பட்டதாகவும், இவர்களில் 139 பேர் குஜராத்தை சேர்ந்தவர்கள் என்றும் கூறியுள்ளார்.

சர்வதேச கடல் எல்லைப்பகுதியில் இந்திய கடலோர காவல்படையின் கப்பல்கள் மற்றும் விமானங்கள் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்திய கடல் எல்லையை தாண்டுவோருக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

பிரதமரின் ஆயுஷ்மான் காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தாத ஆம்ஆத்மி தலைமையிலான தில்லி மாநில அரசுக்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கண்டனம் தெரிவித்துள்ளார்.

வேண்டுமென்றே இந்த காப்பீட்டுத் திட்டத்தை ஆம் ஆத்மி அரசு நடைமுறைப்படுத்தாமல் இருப்பதால் ஏழை மக்களுக்கு துரோகம் இழைப்பதாக தமது சமூகவலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தில்லியில் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட தகுதிவாய்ந்த குடும்பங்களுக்கு சுகாதார காப்பீடு அம்மாநில அரசால் மறுக்கப்படுவதாக திரு. நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

**>>>>><<<<<**

பிரதமரின் மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்திற்கு கடந்த நான்காண்டுகளில், ஆயிரத்து 156 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங், பன்முக மீன்வளத்தை மேம்படுத்தும் வகையில் மீன்வளர்ப்புக்கான 11 நீர்வாழ் உயிரின பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக நடப்பாண்டில் மட்டும் 682 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தமிழ்நாடு, ஆந்திரா, அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், சத்திஷ்கட் உள்ளிட்ட 11 மாநிலங்களில் இந்த பூங்காக்கள் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அமையவுள்ள நீர்வாழ் உயிரின பூங்காவுக்கு 127 கோடியே 71 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் கூறினார்.

**>>>>><<<<<**

ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராக, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவர் திரு. ஹேமந்த் சோரன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

ராஞ்சியில் உள்ள **Morhabadi** மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவருக்கு ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் கங்குவார் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் முடிவடைந்த ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் உள்ள 81 தொகுதிகளில் **JMM -** காங்கிரஸ் கூட்டணி 56 இடங்களில் வெற்றிபெற்று, ஆட்சியை தக்கவைத்தது.

**>>>>><<<<<**

யுக்ரைன் நாட்டின் மேற்குப் பகுதி உள்ளிட்ட பல இடங்களில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

யுக்ரைன் நாட்டிற்கு மின்சாரம் வழங்கக்கூடிய வழித்தடத்தின் மீது, நேற்றிரவு ரஷ்யா நடத்திய தாக்குதலில் 12க்கும் மேற்பட்ட பகுதிகள் இருளில் மூழ்கின.

**Odesa, Kharkiv, Lutsk** ஆகிய நகரங்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதிகளுக்கு அவசரகால மின்சாரத்தை யுக்ரைன் அரசு பயன்படுத்தியதாக அந்நாட்டு எரிசக்தித்துறை அமைச்சர் **Herman Halush Chenko** தெரிவித்தார்.

இதனிடையே, மேற்கத்திய நாடுகளின் ஆயுதங்களை பயன்படுத்தி வரும் யுக்ரைனுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதலை நடத்தியதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காரைக்கால் – மகாபலிபுரம் இடையே நாளை மறுநாள் காலை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் திரு. பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்றிரவு இது புயலாக வலுவடைந்து, கரையை கடப்பதற்கு முன் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கக் கூடும் என்று தெரிவித்தார்.

இதன் காரணமாக, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டிணம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் கன முதல் மிக கனமழைக்கும், ஒரு சில பகுதிகளில் அதிகனமழைக்கும் வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் வானம் அடர் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தலைநகர் தில்லியின் பிரசாந்த் விஹார் பகுதியில் உள்ள பூங்கா அருகே இன்று சக்தி குறைவான குண்டு வெடித்தது.

இதில் பூங்காவின் சுற்றுச்சுவர் பாதிக்கப்பட்டதாகவும், உயிரிழப்பு ஏதும் இல்லை என்றும் தில்லி காவல்துறை அதிகாரி திரு. சஞ்சய்குமார் தியாகி தெரிவித்தார்.

தீயணைப்புத் துறையினர் மற்றும் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

குண்டுவெடிப்பிற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக திரு. சஞ்சய்குமார் தியாகி தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**Lucknow-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-18, 22-20 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Pompicha Choeikeewong-**ஐ வென்றார்.

இதர காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களின் மகளிர் பிரிவில் தஸ்னிம் மிர்-ம், ஆடவர் பிரிவில் பிரியன்சு ரஜாவத் மற்றும் லக்ஷயா சென்னும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் சத்திஷ்குமார் கருணாகரன் - **Aadya Variyath** இணையும், **Dhruv Kapila – Tanisha Crasto** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Rutaparna – Swetaparna** இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் **Pruthvi – Sai Pratheek** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**>>>>><<<<<**

சீன ஓபன் **Taekwondo** போட்டியில் இந்தியா 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

**>>>>>end<<<<<**